[19th September 1958

Sri T. VELUCHAMI : இரண்டு வருஷங்களாயிற்று, இதற்கு எஸ்டிமேட் தயாரித்து, டெண்டர் கூப்பிட்டு, காண்டிராக்ட் கொடுக்க, இப்பொழுது வேலை நிப்பாட்டப் பட்டிருக்கிறது. மக்கள் ஏமாற்றத்தோடு நிற்கிறார்கள். புட் வால்யூ இருப்பதால்தான் இதை புட் ப்ரொடக்ஷன் டிபார்ட்மெண்டார் மராமத்தை எடுத்துக்கொண்டார்கள். ஆகையால் இப்பொழுது, புட் வால்யூவில் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்ற முறையில், செட்டில்மெண்டுக்கு முன்பே இதைச் செய்ய அரசாங்கம் முன்வருமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : கைவிடப்பட்ட ஏரியை உபயோகப்படுத்த, அதை சர்வே செய்து, பலன் தருமா என்பதைப் பார்த்து செய்யவேண்டும். ஆகவே சர்வேசெய்து முடியும்வரை, கைவிட்ட ஏரியை ரிப்பேர் செய்யவேண்டுமானாலும் உணவு உற்பத்திக்கு உகந்த திட்டமானால் எடுத்துக்கொள்ளலாமா என்பது பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

Mount Road disturbances

* 330 *Q.*—**Sri A. V. P. ASAITHAMBI** : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

ஜனவரி 6-ந் தேதி மவுண்ட் ரோட்டில் நடைபெற்ற கலவரத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்க அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறதா அல்லது திட்டமிட உத்தேசமுண்டா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : No Sir.

Sri A. V. P. ASAITHAMBI : ஜனவரி மாதம் 6-ம் தேதி சென்னை மவுண்ட்ரோடில் நேருவைப் பார்க்க வந்திருந்த கூட்டத்திலிருந்தவர்கள் கலவரத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். நேரு அவர்கள் வேறு பாதையில் சென்றதால் இப்படிப்பட்ட குழப்பம் ஏற்பட்டிருக்கிறது. பண்டித நேருவை பார்க்க வந்ததால்தான் கலவரத்தில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதனால் அரசாங்கம் அவர்களுக்கு உடனடியாக உதவி செய்ய வேண்டும். அப்படி உதவிசெய்ய முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன் ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : யார் பாதிக்கப்பட்டிருந்தாலும் அதற்கு கலகம் செய்தவர்கள்தான் பொறுப்பு. ஆகவே நஷ்டஈடு கொடுப்பதற்கு அரசாங்கம் பொறுப்பு அல்ல.

Sri N. R. THIAGARAJAN : கலவரத்தால் பாதிக்கப்பட்டவர்களில் கனம் ஆசைத்தம்பி அவர்களும் ஒருவராக இருந்தால், அவர் சட்டசபை அங்கத்தினராக இருப்பதால் அவருக்கு அதிகப்படியான நஷ்ட ஈடு கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அதைப்பற்றிய தகவலை கனம் அங்கத்தினரைக் கேட்டே தெரிந்து கொள்ளலாம்.

Mr. SPEAKER : Hon. Members need not shout. If any hon. Member shouts, I will not call him.

Sri M. KALYANASUNDARAM : On a point of order, Sir, is it in order for the Leader of the House to instruct the Hon. Speaker as to what should be asked and what should not be asked?

Mr. SPEAKER : The Speaker will see whether what the hon. Member says is in order.

Sri K. ANBAZHAGAN : On a point of order, Sir. This particular question is different from the main question.

Mr. SPEAKER : That is for the Hon. Speaker to see.

19th September 1958]

Sri J. MATHA GOWDER : ஜனவரி மாதம் 6-ம் தேதி நடந்த கலவரத்தில் சர்க்காருக்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இரண்டு சர்க்கார் பஸ்கள் கொளுத்தப்பட்டிருப்பதால் சர்க்காருக்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அந்த நஷ்டத்தை ஈடு செய்வதற்கு ஏதாவது வசூல் செய்ய சர்க்கார் ஏதாவது நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்களா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அந்தக் கலவரத்தில் பலாத்காரம் உபயோகப்படுத்தப்பட்டது. அதன் விளைவாக சர்க்கார் பஸ்கள் சேதமடைந்தன. அதன் மூலம் ஐம்பது ஆயிரம் ரூபாய் சர்க்காருக்கு நஷ்டம். அதை யாரிடமிருந்து வசூல் செய்வது என்பது தெரியவில்லை.

Sri K. ANBAZHAGAN : இந்தக் கேள்விக்கு விடை அளிக்கும் காலத்தில் கலவரத்தைத் தூண்டிவிட்ட கட்சிக்காரர்கள் என்ற முறையில் கனம் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார். கலவரத்தை தூண்டிவிட்ட கட்சிக்காரர்கள் என்று சொல்வது சரியல்ல.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : கட்சிக்காரர்கள் என்ற வார்த்தை என் வாயிலிருந்து வரவே இல்லை.

Mr. SPEAKER : தயவுசெய்து உங்களுடைய பாயிண்ட் ஆப் ஆர்டரைக் கேளுங்கள்.

Sri K. ANBAZHAGAN : நான் சொல்வதை மறுப்பதற்கு இல்லை. அப்பொழுது நாட்டில் நடந்த கலவரம் சம்பந்தமாக நீதி மன்றத்தில் வழக்குகள் நடைபெற்று வருகின்றன. அப்படி நாலைந்து வழக்குகள் பதிவாகி நடைபெற்று வருகின்றன. அந்த நிலைமையில் ஒரு குறிப்பிட்ட கட்சிக்காரர்கள் அதற்கு பொறுப்பு என்ற முறையில் விடை அளித்தால் அது சரியா, அப்படி பதில் சொல்லலாமா என்பதை அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : " கில்டி கான்ஷியன்ஸ் " என்று ஒரு பழமொழி சொல்வதுண்டு. நான் பதில் சொல்லும் காலத்தில் கலவரத்தை தூண்டிய கட்சிக்காரர்கள் என்று பதில் சொல்லவில்லை. கலவரம் செய்தவர்கள்தான் பொறுப்பு என்று சொன்னேன். வேறு ஒன்றும் சொல்லவில்லை.

Mr. SPEAKER : I would like to know if there are cases in Court on this. I am not aware of any case on this. The Hon. Speaker is not expected to know what cases are in the Court, unless some hon. member brings them to his notice. If the hon. member says, it is *sub judice* I take the information from him.

Sri A. GOVINDASAMY: இதைப்பற்றிய வழக்குகள் கோர்ட்டில் இருப்பதால் இந்தக் கேள்விக்கு கேட்கப்பட்ட உப கேள்விகளையெல்லாம் சட்டசபை நடவடிக்கையிலிருந்து " எக்ஸ் பஞ்ச் " பண்ணும்படியாக உத்தரவு போட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

Mr. SPEAKER : அது முடியாது.

Harijan trustees in temples

*331 *Q.*—**Sri M. C. MUTHUKUMARASWAMY:** கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

கடந்த 6—4—1958-ல் மாநில ஹரிஜன நல கமிட்டியாரால் அரசாங்கத்தின் மேற்பார்வையிலும் ஆதீனங்களின் மேற்பார்வையிலும் உள்ள தேவஸ்தானங்களில் அவசியமாக ஹரிஜன தர்மகர்த்தாக்களை நியமிக்க வேண்டுமென அனுப்பிய தீர்மானத்தின் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?